Registered as a Newspaper [illegible] 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 22 (06-01-1994) வியாழக்கிழமை ஓசை 322

## வன்னிப் பெருநிலப் பரப்பில் முதலாவது மாவட்ட நீதிமன்றம்

வன்னிப்பெருநிலப்பரப்பில் நேற்று முதலாவது தமிழீழ மாவட்ட நீதிமன்றம் கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது. இது தமிழீழத்தில் திறந்து வைக்கப்பட்ட ஐந்தாவது மாவட்ட நீதிமன்றமாகும். நேற்றுக்காலை 10 மணிக்கு வன்னிமாவட்ட விசேட தளபதி ரவி தமிழீழ தேசியக்கொடியை ஏற்றிவைக்க வன்னி மாவட்டத் தளபதி குட்டி நீதிமன்றைத் திறந்துவைத்தார் நீதி நிர்வாகப் பொறுப் பாளர் பரா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் நடேசன் மங்களவிளக்கை ஏற்றிவைத்தார். தமிழீழ நீதிமன்றம்-கிளி நொச்சி மாவட்டம் என்ற பெயர்ப் பலகையை வன்னி (3ஆம் பக்கம் பார்க்க)

## தாவடி - சாவகச்சேரியில்

# விமானக் குண்டு வீச்சிற்கு 6 அப்பாவி பொதுமக்கள் பலி!

## நேற்று நடந்த கோரச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நேற்று நண்பகல் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் யாழ். குடாநாட்டில் தாவடி, சாவகச்சேரிப் பகுதிகளில் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் ஆறு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஐந்துபேர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்ததோடு, பெருமளவு சொத்துக்களும் நாசமாயின.

நேற்று நண்பகல் 11-00 மணியளவில் தாவடிப் பகுதியில் புக்காரா விமானம் நடத்திய தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாயினர். நான்கு வீடுகளும் சேதமடைந்தன.

இதேவேளை சுமார் 11-15 மணியளவில் சாவகச்சேரியில் சுப்பர் சொனிக் மற்றும் புக்காரா விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. இதில் இருவர் பலியாயினர். இதில் ஒருவர் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியும் மற்றவர் குண்டுவீச்சு அதிர்ச்சியிலும் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில்மேலும் ஐவர் படுகாயம் அடைந்ததோடு பல வீடுகளும் சேதமடைந்தன.

## தாவடியில் குழந்தை உட்பட நால்வர் உடல் சிதறிப்பலியாகினர்

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்றுக்காலை தாவடிப் பகுதியில் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலினால் ஒரே வீட்டில் வசித்த குழந்தை உட்பட நால்வர் உடல் சிதறிப் பலியாகினர்.

நேற்றையதினம் காலை 11 மணியளவில் யாழ். குடா நாட்டின் [illegible] மிட்ட புக்காரா விமானம் ஒன்று தாவடி பகுதியில் நடத்திய இக் குண்டு வீச்சினால் தையிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து அப்பகுதியில் தங்கியிருந்த சரஸ்வதி திருவம்பலம் (வயது 36), சாந்தினி சண்முகநாதன் (வயது 23), லோஜிகா மகேஸ்வரன் (வயது 02), திருமதி பொன்னுத்துரை செல்வரத்தினம் (வயது 68), [illegible] உடல் சிதறிப் பலியானவர்களாவர்.

இவர்கள் பதுங்கு குழியை நாடி ஓடியபோது குண்டு வீழ்ந்து வெடித்ததினாலேயே கோரமான முறையில் பலியாக வேண்டி ஏற்பட்டது. இச்சம்பவத்தின் போது தாவடி உப தபால் நிலையம் உட்பட நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

(ச. சி. 09. 11)

### இன்று மூடப்பட்டிருக்கும்

இன்று மட்டும் சகல அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டை பதிவுப் பகுதி செயலகங்களும் தவிர்க்க முடியாத காரணத்தினால் திறக்கப்பட மாட்டாது என்பதை பொது மக்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.


## பருத்தித்துறைகடலில்கடற்படை தாக்குதலால் கொல்லப்பட்ட மீனவர் ஒருவரின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை சற்கோட்டைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் கடற் படையினரால் கடலில் வைத்து கொல்லப்பட்டவர்களில் ஒரு மீனவரின் சடலம் நேற்றுக்காலை 10 மணியளவில் மணற்காடு கடற் பகுதியில் வைத்து மீட்கப்பட்டது,

பலாலியிலிருந்து சற்கோட்டையில் வசித்துவந்தவரான தேவதிரவியம்- ஜெயரட்ணம் என்பவரது சடலமே மீட்கப்பட்டது. இவர் கடற்தொழிலுக்குச் செல்லும்போது உடலில் மிதவைக்கட்டை அணிந்திருந்தார். இதனால் இவரின் சடலம் கடலில்மிதந்துகொண்டிருந்தபோது எளிதில் மீட்க முடிந்தது.

மற்றைய ஏழு பேரின் சடலங்கள் மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மீட்பதற்கு மீனவர்களுக்கு உதவியாக கடற்புலிகள் உதவிகள் புரிந்து வருகின்றனர். (யோ)



தாவடியில் நேற்று இடம்பெற்ற புக்காரா தாக்குதலில் பலியான ஒருவரின் சடலத்தை மேலுள்ள படத்தில் காணலாம்.

## யுத்தமே எமது இறுதி முடிவு

உடல் சிதறிப் பலியாகினர்.
நேற்றையதினம் காலை 11 மணியளவில் யாழ். குடா நாட்டை திடீரென வட்ட

லோஜிகா மகேஸ்வரன் (வயது 02), திருமதி பொன்னுத்துரை செல்வரத்தினம் (வயது 68), ஆகியோரே

தாவடி உப தபால் நிலையம் உட்பட நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன.
(ச, சி, 09, 11)

னால் திறக்கப்பட மாட்டாது என்பதை பொது மக்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

# சுவரிலே சதைத்துண்டங்களும் இரத்தமும் வழிந்துகொண்டிருந்தது

## தாவடியில் நிகழ்ந்த கோரம்பற்றி விபரிப்பு

(து. சசிகரன்)

வீதியில் புரண்டு ஓலமிட்டபடி நின்றவர்களைத் தாண்டி படலையைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தபோது எதிர்ப்புற சுவரிலே சதைப் பிண்டங்களின் சிதறல்களுடன் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

தாவடிப் பகுதியில் நேற்றுக் காலை புக்காரா விமானம் குண்டுவீச்சு தாக்குதலை மேற்கொண்ட சில நிமிடங்களுக்குள் ஸ்தலத்திற்குச் சென்றபோது இக் கோரக் காட்சியைக் காணமுடிந்தது. குண்டுவெடித்த சில நிமிடங்களுக்குள் குண்டுவெடித்த இடத்தை நோக்கி விரைந்த போது தாக்குதல் நடாத்திய சிறிலங்காவின் விமானப் படைக்குச் சொந்தமான புக்காரா விமானம் தொடர்ந்து வானில் மிக உயர்வாக வட்டமிட்ட வண்ணமிருந்தது.

காங்கேசன்துறை வீதியின் இரு மருங்கிலும் இடுப்பளவு வெள்ளத்தில் குழந்தைகளை கைகளிலும், தோள்களிலும் தூக்கியவாறு ஆண்களும், பெண்களுமாக வீதியின் குறுக்கே போடப்பட்டுள்ள பாலத்திற்குள் அவசர அவசரமாக புகுந்த வண்ணமிருந்தனர். இன்னும் சிலர் விமானத்தின் அடுத்த குண்டு வீச்சின் இலக்கை எதிர்பார்த்தபடி காத்து நின்றனர்.

தாவடிச் சந்தியை சென்றடைந்த நாம் அங்கிருந்து சம்பவம் நடைபெற்ற இடத்தை நோக்கி விரைந்தபோது அண்மித்த ஒழுங்கை ஒன்றிற்குள் இருந்து அழு குரல்கள் கேட்டன. இவ் அழு குரல் கேட்ட திசையை நோக்கிய போது பெண்மணி ஒருவர் நிலத்தில் புரண்டபடி அழுது கொண்டிருந்தார் ''ஐயோ என்ரை பிள்ளை, என்ரை பிள்ளை எல்லாமே போச்சே யாராவது போய் என்ரை பிள்ளையைப் பாருங்கோ'' என அவலக் குரல் எழுப்பியவாறு கண்ணீர் மல்க கதறினார்.

சிதறிக் கிடந்த கூரை, விமானம் நடாத்திய குண்டு வீச்சு இடத்தை சுலபமாக இனம் காட்டியது. படலையை வேகமாக திறந்து கொண்டு உள்ளே நுழைந்த போது எதிர் வீட்டின் பின்புற சுவரிலே சதைகளுடன் ஒட்டியபடி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அதனை நோக்கி அவசரமாக நடக்க முற்பட்டபோது உடலின் சில சதைகளுடன் கூடிய இடது கை ஒன்று சுருண்டபடி காலிலே தட்டுப்பட்டது. அதற்கு சற்றுத்தள்ளி ஓர் பெண்மணியின் உடல் குப்புற தலை சிதறியபடி கிடந்தது; அயல் வீட்டின் சுவரருகில் வழிந்த இரத்தத்தின் கீழ் ஓர் உடலின் சில பாகங்கள் பச்சைநிற பற்றிக் சட்டையின் சில பகுதிகளுடன் காணப்பட்டது. அதனுடன் இணைந்தாற் போல் வயிறுபிரிந்து குடல்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவி குண்டுவீச்சுக்குப் பலி

## வயோதிபர் அதிர்ச்சி மரணம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று விமானப்படை விமானங்கள் நடாத்திய தாக்குதலுக்கு ஒரு இளம் பெண் பலியானார். மற்றொருவர் அதிர்ச்சியினால் மரணமானார்.

நேற்றுக் காலை 11.15 மணியளவில் சாவகச்சேரி நகரப்பகுதியில் புக்காரா விமானம் நடாத்திய தாக்குதலில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவியான மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த கோபாலசிங்கம் குலேந்திரராணி (வயது 15) பலியானார். இவர் பொதுக்கல்வித் தேர்வு பெறுபேறுகளைப் பார்க்க பாடசாலை சென்று கொண்டிருந்த போது வழியில் பலியானார். இவ் விமானம் 3 குண்டுகளை வீசியது.

இதனையடுத்து அப் பகுதிக்கு வந்த இரு சுப்பர்சொனிக் விமானங்கள் அதே இடத்தில் 'கனன்' தாக்குதலை நடத்தியது. இதனால் அதிர்ச்சியுற்ற அப்பகுதியால்சென்றுகொண்டிருந்த மீசாலை தெற்கைச் சேர்ந்த சிற்றம்பலம் பிறைசூடி (வயது50) மரணமானார்.

இத்தாக்குதலில் ஐவர் காயமடைந்தனர். முனுசாமி தவசுமணி (வயது30) கிராம்புவில் சாவகச்சேரி, பே. தங்கம்மா(வயது80) சாவகச்சேரி, நடராசா இரட்ணம்மா (வயது48) சாவகச்சேரி, ஜெயலக்கண்ணி இராமலிங்கம் (வயது35) சாவகச்சேரி, ராமு சின்னத்தம்பி(வயது62) சாவகச்சேரி இவர்கள் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை மட்டுவில் மக்கள் குடியிருப்பு பகுதிகள் மீதும் சுப்பர்சொனிக் கலிபர் தாக்குதலைநடாத்தியுள்ளது. இதில் வீதியால் சென்ற பாதசாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

(86)

# யுத்தமே எமது இறுதி முடிவு புலிகள் பலவீனப்பட்டாலே பேச்சு

## - ஹமில்டன் வனசிங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தமே எமது இறுதி முடிவு. நாம் யுத்தத்திற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம் இதனை எமது ஜனாதிபதி உட்பட சகலரும் மிகவும் தெளிவாக கூறியுள்ளார்கள் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசின் தற்போதைய நிலைப்பாடுகுறித்துவிளக்குகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் கூறுகையில் இந்த ஆண்டுயுத்தம், யுத்தம் யுத்தம்தான்எமதுமுடிவு. இதற்கு ஏற்ற வகையில் எமது படையில் பல மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளோம். யுத்தத்தினால் புலிகள் பலவீனம் அடைந்த நிலையில் மட்டுமே அவர்களுடன் பேச முடியும் என தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் இன்று அனேகமான பிரச்சினைகள தீர்க்கப்பட்டு விட்டன. இன்னும் சில பிரச்சினை மட்டுமே தீர்க்கப்படாமல் உள்ளது இவற்றை திறந்த மனதுடன் பேசுவதினால் மட்டுமே தீர்க்க முடியும். அன்றி அரசாங்கத்துடன் யுத்தம் புரிவதினால் பெற முடியாது என்பதை விடுதலைப் புலிகள் நன்கு உணர வேண்டும்.

அண்மைக் காலத்தில் வகுக்கப்பட்டுள்ள திட்டங்களைத் தொடர்ந்து மிக விரைவில் வடக்கு கிழக்கு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படும். இதற்கு சகல படைத் தளபதிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும் என நான் நம்புகிறேன் என மேலும் அவர் தெரிவித்தார்.

# லொறி விபத்து

(தென்மராட்சி)

செம்மணி வெளியில் பிரதான வீதியில் வந்து கொண்டிருந்த இரு லொறிகள் விபத்திற்குள்ளானதை அடுத்து அவ்வீதியில்வந்து கொண்டிருந்த மற்றொரு லொறிவீதியை விட்டு தரையிறக்கமுயற்சித்த போது தரம்புரண்டது

இச் சம்பவம் நேற்று இடம்பெறறது இதில் இரண்டு லொறிகள் சேதமடைந்தன. மேலும் இச் சம்பவத்தில் சாரதிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

(86)

# இருபோராளிகள் வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில் நேற்று ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

கப்டன் மதி (பரஞ்சோதி கணேசமூர்த்தி காரைநகர் தற்போதைய முகவரி கமல் வீதி, முஸ்லிம் தெரு கொட்டடி யாழ்ப்பாணம்.)

லெப். தேவன் (செல்லத்துரை சுந்தரலிங்கம் தாளையடி. நாகர்கோவில் முகாம் வடமராட்சி கிழக்கு) ஆகிய இருவருமே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் மதி



லெப். தேவன்

# வரி விளம்பரம்

## பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, Jaffna.
(சி-8249)

## அப்பியாசக் கொப்பி

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் அல்லது 25 மில்க்வைற் சலவைப்பவுடர் வெற்றுப்பக்கற்றுகள் எம்மிடம் சேர்ப்பித்தால் ஒரு அப்பியாசக்கொப்பி வழங்கப்படும். '' மில்க்வைற் '' (சி-8289)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

HYLINE BROWN கைலன் பிறவுண் 9 நாள் பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு '' மல்லிகாபதி '' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (7152)

## கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள். றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும். சகல கடிகாரங்கள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் (Dilka Watch & Radio Works) ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8129)

## ''அகிலன்ஸ்''

சகல விதமான வாகனங்களின் இலக்கத்தகடுகளும், அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள் X கறுப்பு) எழுத்தோவியர் '' அகிலன்ஸ் '', 426, கண்டி வீதி, அரியாலை. (7072)

## அறிவியல் கதிர் வெளியீடு

யாழ்ப்பாணம் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான தினமும் 'அறிவியல் கதிர்' வெளியீட்டு விழாவும் நாளை வெள்ளிக்கிழமையன்று நடைபெறவுள்ளது. அதிபர்கள் சங்கத் தலைவர் அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் நூலின் முதற்பிரதியை டாக்டர் ஏ. உமாகாந்தன் பெற்றுக்கொள்ளவுள்ளார். திரு

---

## ஜனவரி 9' ஞாயிறு (மாலை 3 மணி) முதல்
## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**O/L (ஆண்டு 11)**
**ஆண்டுகள் 10, 9**

★ உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்
(சி-8270)

---

புதிய
# எடிசன் அக்கடமி

(கொக்குவில் இந்து அருகாமையில்)
27, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

**கல்வி ஆண்டு 1994**

## ஆண்டு 4 முதல் O/L வரை

யாழ். முன்னணி ஆசிரியர் குழுவின்
ஒருங்கிணைந்த சேவை

| | | |
|---|---|---|
| கணிதம் | : | திரு B.P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | ) | திரு. J.R. சூரி |
| | ) | திரு. J.J. கொலின்ஸ் |
| ச. கல்வி | : | திரு. க கோபி |
| தமிழ் | ) | திரு. தங்கவேல் |
| | ) | திரு S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | : | திரு. C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | : | திரு தர்மராஜன் |
| சமயம் | : | திரு. கோ. இராஜலிங்கம் |

**ஆரம்பம்**

***06-01-1994* வியாழன் பி.ப. 4 மணி**

முக்கிய குறிப்பு:
ஃ O/L வகுப்பிற்கு 8-ம் மாதம் சகல பாடங்களிலும் பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
ஃ கடந்த 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.
(சி-8282)

---

## ஈழநாதம்
## 4-ம் ஆண்டு நிறைவு
மாணவர்களுக்கான

---

# தமிழீழக் கல்வி மேம்பாட்டு நிதியம்

''புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் மேற்படி நிதியத்தைப் பொங்கல் திருநாளன்று ஆரம்பிக்கவுள்ளனர். மாவட்ட, கோட்ட மட்டங்களில் நிதியம் ஆரம்பித்து வைக்கப் பெறும்.


இந்நிதியம் பேரவையின் நோக்கங்களான, தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டை ஊக்குவித்தல்; ஆசிரியர்களின் வாண்மையை வளர்த்தல்; என்பவற்றிற்காகப் பயன்தரும் வகையில் உபயோகிக்கப்பெறும்.

நிதிவளம் படைத்தவர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அறநிலையங்கள், தொண்டர் நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் சமூக நிறுவனங்களிடமிருந்து நிதி அன்பளிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அன்பளிப்புகளை வழங்குவதற்கான விபரங்கள் செய்தித்தாள்கள் மூலம் அறிவிக்கப்படும். தொடர்பு கொள்ள விரும்புவோர்,

பெரும் பொருளாளர்,
**தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை,**
இல. 19, நாயன்மார்கட்டு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு எழுதி விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (சி-8290)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1975.08.31

மறைவு
1992.12:17

## நாகராசா கமலராசா (கரன்)
**திதி: 06-01-1994**

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் எங்கள் நெஞ்சத்தில் நிறைந்த அன்பு மகன் கரனே, கனவாக நீங்கள் மறைந்து ஆண்டொன்று ஆனாலும், உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலா.

உங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனை
வேண்டுகிறோம்.

15, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு.
(7145)

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணன்மார், பேரன்,
பேத்தி.

---

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி
இடம்பெயர்ந்த குரும்பசிட்டி
மாணவர்களிற்கு

## இலவச சீருடை விநியோகம்

குரும்பசிட்டி (J/242), குரும்பசிட்டி கிழக்கு (J/243) கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தரவதிவிடமாகக் கொண்டு இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மாணவர்களிற்கு கனடாவிலுள்ள குரும்பசிட்டி நலன்புரிச்சபை, சுவிஸ் வாழ் குரும்பசிட்டி இளைஞர்கள் வழங்கிய நிதியில் இலவசமாக சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் பயன்பெற தகுதியானோர் 9-1-94 முதல் 14-1-94 வரை கீழ்க்கண்ட முகவரியில் விண்ணப்பப்படிவங்களை தங்கள் குடும்பப்பதிவு அட்டைகளைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

திரு. செ. ஈஸ்வரபாலன்
நாகவேல் அகம்
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
(7150)
சி. சசிகுமார்
பிரசார செயலாளர்.

---

யாழ். வர்த்தகர் சங்கம்

## கலந்துரையாடலும் கருத்தரங்கும்

யாழ்நகர் சகல வர்த்தகர்களுக்குமான ஒரு கலந்துரையாடல் 07-01-94 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நவீனசந்தை மேல்மாடி யாழ் வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் குறிப்பாக வர்த்தகர்களின் பங்களிப்பு பற்றி விரிவான கலந்துரையாடல் அரசியல்துறைப் பிரமுகர்களால் நடாத்தப்படும்.

சகல வர்த்தக உரிமையாளர்களும் தவறாது நேரில் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி, வணக்கம்
இங்ஙனம்

(7153) தலைவர் -பொதுச் செயலாளர்

---

# நினைவு கூருகின்றோம்..
# 1994-01-06

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி-திருநகர்ப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்யமுயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஜெயசீலன்** (கந்தையா மனோகரன்-சிவநகர்-கிளிநொச்சி)

திருக்கோணமலை, பிரட்றிக் கோட்டை முகாமினுள் வைத்து சிறிலங்கா ராணுவத்தினராற் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1987ஆம் ஆண்டு கிளிநொச்சி-பூநகரி, 4-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அன்னக்கிளி** (குமாரு நகுலேஸ்வரன்-பூநகரி--கிளிநொச்சி)

1988ஆம் ஆண்டு யாழ்-சண்டிலிப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய,

ந்து கொள்ளும் இவ்விழாவில் நூலின் முதற்பிரதியை டாக்டர் ஏ. உமாகாந்தன் பெற்றுக்கொள்ளவுள்ளார். திருமதி கோகிலா மகேந்திரன் நூலின் ஆய்வுரையை நிகழ்த்த இருக்கிறார். விஞ்ஞான மன்றத் தலைவர் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகிப்பார்.

## கண்டெடுப்பு

மதியழகன் பொன்னுத்துரை என்பவரது தேசிய அடையாள அட்டை வீதியில் கிடக்கக் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## படகிலிருந்து தவறி விழுந்து மரணம்

(வடமராட்சி)

கிளாலிக் கடலில் படகில் பயணம் செய்த இளைஞர் ஒருவர் படகில் இருந்து தவறி விழுந்து மரணமானார்.

அல்வாய் மேற்குவத்தனையைச் சேர்ந்த து. சிவகுருநாதன் (வயது 26) என்ற இளைஞரே கடந்த 28ஆம் திகதி மரணமானதாக அறிய முடிகிறது.

சம்பவ தினம் இவர் கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே மரணமடைய நேர்ந்தது. இவரது சடலம் மீட்கப்படவில்லையெனவும் அறிய முடிகிறது. (யோ)

## மாணவர் கவனத்திற்கு

(பருத்தித்துறை)

5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் ஆண்டு 6இல் அனுமதிபெறவிரும்பும் மாணவர்கள் தற்போது கல்விகற்கும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட புள்ளி விபரங்களுடன் இம்மாதம் 7-ம் திகதிக்கு முன்னர்விண்ணப்பிக்குமாறு ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு நடராசா அறிவித்துள்ளார். (25)

## மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

**தலைப்பு:**

### "போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகிறதா?"

**போட்டி விதிகள்:**

- கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர் முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், அக்கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1994 ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- போட்டி முடிவுகள் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்,
- இப்போட்டியில் முதலாவது பரிசுபெறும் கட்டுரை நான்காவது ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப் படும்.
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு நான்காவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்**

**ஈழநாதம்**


31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்,

என்ற முகவரியிட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

15, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு.
(7145)

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணன்மார், பேரன்,
பேத்தி.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை சிறி (கண்ணாடி)

(நவரெத்தினசிங்கம் கிருபாகரன்)

| தாயின் மடியில் | வீரச்சாவு |
| --- | --- |
| 07-02-1965 | 06-01-1988 |

06. 01. 1988இல் மானிப்பாய் - நவாலியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

இவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கிருபாகரன் வீதி,
நல்லூர் வடக்கு.

-குடும்பத்தினர்
(7144)

யில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய,

**ஈசன்** (இராசரத்தினம் பாலகேதீஸ்வரன்-நெடுங்குளம் வீதி, அரியாலை-யாழ்)

யாழ்ப்பாணம்-தென்மராட்சிப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சுதர்சன்**

**யோன்சன்**

யாழ்-மானிப்பாய், நவாலிப்பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**சிறி கண்ணாடி** (நவரத்தினசிங்கம் கிருபாகரன் நல்லூர்வடக்கு-யாழ்)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி புளியம்பொக்கணைப்பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சின்னஜீவகன்** (பழனி ஜெகதீஸ்வரன் - இடதுகரை, முத்தையன்கட்டு-முல்லைத்தீவு)

1991ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எமது பயிற்சி முகாமொன்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த,

**வினோத்** (அல்பிறேட் கிறிஸ்ரிராஜா-புலோப்பளை-பளை)

1992ஆம் ஆண்டு மன்னார்-நறுவிலிக்குளம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்திற்கெதிராக மேற்கொள்ளப்படவிருந்த கண்ணிவெடித்தாக்குதலிற்கான ஆயத்த நடவடிக்கைகளின்போது, எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

மன்னார் மாவட்டத்தளபதி,

**லெப். கேணல் வேணு** (பிரான்சிஸ் றொபேட் சேவியர்-ஆண்டாங்குளம், அடம்பன்-மன்னார்)

**மேஜர் குகன்** (இராமலிங்கம் சிவஞானம்-மணற்குளம், மன்னார்)

**மேஜர் சயந்தன்** (தங்கராசா ராஜ்மோகன்-உப்புக்குளம்-மன்னார்)

**கப்டன் குட்டிமணி** (அருளானந்தம் றேமன்-கடற்கரைவீதி, பேசாலை-மன்னார்)

1993ஆம் ஆண்டு யாழ் - சித்தன்கேணிப் பிள்ளையார் ஆலயத்தை அண்டிய பொதுமக்கள் குடியிருப்புகள்மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட அகோர மிகையொலி விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வலிகாமம் மேற்கு இராணுவ நடவடிக்கைகளின் போது இடம் பெயர்ந்து வந்து தஞ்சமடைந்திருந்தோர், இளைஞர்கள், பெண்கள், உட்பட 10 பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8288)

## சிந்தனைக்கு

கடுமையை மென்மையாலும், பகைமையை அன்பினாலும், சோம்பலை செயலூக்கத்தாலும், இருளை ஒளியாலும், வெல்ல வேண்டும்.

- மகாத்மா காந்தி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

# தார்மீக பலமும் தேவை

தனது பதவியில் இருந்து விலகிச் சென்ற சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா தனது இறுதி பிரியாவிடைச் செய்தியில் சிறிலங்கா இராணுவத்திற்குப் பெரும் புகழாரம் சூட்டியுள்ளார். ''எமது ஆயுதப் படையினர் உலகில் சிறந்த இராணுவப் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்கள், ஆசியப் பிராந்தியத்தில் உள்ள எந்த இராணுவத்தையும் விட எமது இராணுவம் சிறந்த தொழில்சார் திறமை மிக்கது'' என்பதே அவர் வழங்கிய பாராட்டாகும்.

சிசில் வைத்தியரெட்னாவின் இப்பாராட்டானது, ''தோல்வியுறும் இராணுவத்திற்குத் தளபதியாக நான் இருக்க விரும்பவில்லை'' எனக் கூறியதினால் உருவாகிய கசப்பான உணர்வைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவும் இருக்கலாம். ஆயினும், அவர் கூறியுள்ளதில் சில உண்மைகள் இல்லாமலும் இல்லை.

அதாவது சிசில் வைத்தியரெட்னா கூறியது போன்று ஆசியாவில் உள்ள எந்தவொரு இராணுவத்தையும்விட தொழில்சார் திறமையில், சிறிலங்கா இராணுவம் சிறந்ததென்பது முழுமையாக ஏற்புடையது அல்ல. எனினும், ஆசியாவில் உள்ள இராணுவத்தில் தொழில்சார் திறமையுள்ள முன்னணி இராணுவங்களில் சிறிலங்கா இராணுவமும் இடம் பெறக் கூடியதே.

ஆனால், சிறிலங்கா இராணுவம் தனது தொழில்சார் திறமையைப் பெருக்கிக் கொள்வதற்காக கடந்த காலத்திலும், தற்பொழுதும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதில் சந்தேகமில்லை. இதற்கெனப் பெரும் நிதிவளம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, சிசில் வைத்தியரெட்னா கூறியிருப்பது போல் உலகில் சிறந்த இராணுவப் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்கும் மேலாக உலகிலுள்ள முன்னணிக் கூலிப்படைகளிடம் இவை பயிற்சி பெற்றவை என்பது முக்கியமானதாகும்.

இந்நிலையில், சிறிலங்கா இராணுவத்தின் தொழில்சார் திறமை என்பது கணிசமான ஆற்றல்மிக்கது என்பது ஏற்றுக் கொள்ள வேண்டியதொன்றே. நிலைமை இவ்வாறிருக்க சிறிலங்கா இராணுவம் ஏன் பின்னடைவுகளைச் சந்திப்பது என்ற கேள்வியில் தவறு ஏதும் இருப்பதாக இல்லை.

அதாவது, சிசில் வைத்தியரெட்னா ''எதிரியோ

# மாவுக்காக அரசிடம் கையேந்தாது மாற்றீட்டுபொருள்களைபயன்படுத்துக

## மக்களிடம் அரச அதிபர் கோரிக்கை

(நமது நிருபர்)

கோதுமை மாவிற்குப் பதிலாக மக்கள் உரிய மாற்றீடுகளைப் பயன்படுத்தி தமது நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தற்போது யாழ். குடாநாட்டில் நிலவும் மா தட்டுப்பாடு குறித்து யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஈழநாதத்திற்கு வழங்கிய விசேட செவ்வியில் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் விளக்கமளிக்கையில்;

கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மட்டும் ஆறாயிரம் மெற்றிக் தொன் மா குடாநாட்டிற்குள் எம்மால் விநியோகிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக மழை மற்றும் விறகுத்தட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் பாணை நுகருவதில் கூடியளவு நாட்டம் செலுத்தி வந்துள்ளனர். அத்துடன் கடந்த சில நாட்களாக பெய்தகடும்மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணமாக கூடுதலான மா விநியோகிக்கப்பட்டது. இதனாலேயே மாவின் பயன்பாடு குடாநாட்டில்திடீரென அதிகரித்து தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் கூடியளவில் மாவை கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்துவதற்கான களஞ்சிய வசதிகள் இங்கு இல்லை. தனியார் கட்டடங்களிலேயே களஞ்சியப் படுத்தப்படுகிறது. அங்கு கூடுதலான அளவில் களஞ்சியப் படுத்த முடியாதுஉள்ளது. ஏனெனில் மா விரைவில் பழுதடையக் கூடியதாக இருப்பதால் நீண்ட காலத்திற்கு பாதுகாத்து வைப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. மேலதிகமாக களஞ்சியப் படுத்துவதானால் இனிமேல் பாடசாலைக் கட்டடங்களையே நாம் களஞ்சிய சாலைகளாகப் பயன்படுத்த வேண்டிய நிலை உருவாகும்.

இதேவேளை அண்மைக் கால சீரற்ற காலநிலை காரணமாக ஏழு நாட்களில் இறக்கவேண்டியமா இரண்டு மாதங்களாக இறக்கப்படாது கப்பலிலேயே காத்துக் கிடந்தது. அத்துடன் டிசம்பர் முதல்வாரத்தில் குடாநாட்டு மக்களின் பயன்பாட்டிற்கென எடுத்துவரப்பட்ட 300 மெற்

மா கையிருப்பில் உண்டு. இவற்றைஅவர்கள் மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். அவ்வாறு விநியோகிப்பின் அவை சில நாட்களுக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என நான் நம்புகிறேன்.

தற்போது குடாநாட்டில் நிலவும் தற்காலிக தட்டுப்பாடு இன்னும் இரு வாரங்களில் நிவர்த்தியாகும். இரண்டு கப்பல்களில் மாவை உடனடியாக எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளில் நான் ஈடுபட்டுள்ளேன்.

ஆயினும் இந்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மக்கள் முன்வர வேண்டும். கடந்த சில வருடங்களாகவே இந்த கோதுமை மா (அமெரிக்கன் மா) வின் பயன்பாடு குடாநாட்டில் அதிகரித்து காணப்படுகின்றது. இதில் எந்தவிதமான ஊட்டச் சத்துக்களும் எமது உற்பத்திப் பொருள்களில் இருப்பது போன்றுகிடையாது. எனவே மக்கள்மாவின்பயன்பாட்டை குறைத்து உள்ளூர் உற்பத்திகளான குரக்கன், சோளம், பயறு. தினைபோன்றவற்றை மாற்றீடாக பயன்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். நாம் எமது உற்பத்திகளை கைவிட்டும் அதனை நுகர்வதில் நாட்டம் செலுத்தாது அரசையே நம்பி கையேந்திக் கொண்டிருப்போமேயானால் தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். மேலும் தற்போது பச்சைஅரிசி, குத்தரிசி என்பன சுமார் 50 நாட்களுக்கு போதுமானஅளவு எம்மிடம் கையிருப்பில் உண்டு. இதில் பச்சை அரிசியை மக்கள் தற்காலிகமாக பெற்று மா தேவையை ஈடுசெய்யலாம் என கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ச)

# காரைநகர் கம்பன் கழகம் நடத்தும் 3நாள் விழா

காரைநகர் கம்பன் கழகத்தினர் நடத்தும் கம்பன்விழா எதிர்வரும் 21-ம், 22-ம், 23-ம் திகதிகளில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பட்டிமண்டபம், கலைதெரி அரங்கம், இலக்கியச் சோலை, கவியரங்கம், வழக்காடு மன்றம், சுழலும் சொற்போர், படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள், கம்பன் இசை அமுது, எழிலுரைகள் எனப் பல அம்சங்களும் இடம் பெறவுள்ளன. தமிழீழத்தின் பேரறிஞர்களும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், சொற்பொழிவாளர்களும், கலைஞர்களும், ஆத்மீக அறிஞர்களும் இந்த விழாவில் கலந்து சிறப்பிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது

# அரசின் முக்கியஸ்தர்களின் வீட்டுத் தோட்டங்களில் தோண்டுக

## எலும்புக் கூடுகள் கிடைக்கும் என்கிறா - சிறிமா

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பகுதியில் புதைகுழிகளிலிருந்து பல எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டது தொடர்பாக மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து பக்கசார்பற்ற நீதிவிசாரணை நடத்துமாறு சிறிமாவோ பண்டாரநாயக்கா கோரியுள்ளார்.

அரசின் முக்கிய பிரமுகர்களாக இருப்போரின் வீட்டுத் தோட்டங்களை தோண்டினால் மேலும் எலும்புக் கூடுகள் கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவிக்கார்

எனவும் மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் 15 முதல் 20வரையிலானவர்களினுடையதாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

# கருத்தரங்கு பிற்போடப்பட்டது

நல்லூர் யாழ்ப்பாணக் கோட்டங்களுக்கான ஆண்டு 1 - 3 ஆரம்ப ஆசிரியர்களுக்கு இன்றுமுதல் எதிர்வரும் 9ஆம் திகதிவரை நடைபெறவிருந்த கருத்தரங்குதவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்

கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்

# போட்டியிட முனைந்தவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கிழக்கில் அரசினால் நடாத்த திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட முனைந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் சித்தாண்டியைச் சேர்ந்த கனகரட்ணம் ஜீவரட்ணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடத்திச் செல்லப்பட்டு பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டு பிணமாக கிடந்த இவரின் சடலம் அருகே ''தேர்தலில் பங்குபற்ற முனையும் அனைவருக்கும் இது தான் கதி'' என்று எழுதப்பட்ட பிரசுரம் ஒன்றும் காணப்பட்டது. உள்ளூராட்சி தேர்தலில் பங்குபறறுவதற்கென சில தமிழ்க் குழுக்கள் மட்டக்களப்பில் சுயேட்சை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. கொல்லப்பட்டவர் இவ்வமைப்பில் உள்ளவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நேற்று ஆரம்பித்துள்ள நிலையில் தேர்தலை புறக்கணிக்குமாறு கோரும் சுவரொட்டிகளும் காணப்படுகிறது. தேர்தல் பிரசாரத்தை புலிகள் தடுப்பர் என்பதால் அரசு தேர்தலை கைவிடவேண்டும் என பலதமிழ்க்கட்சிகள்கோரியுள்ளன.

# மாவீரர் வித்துடல்கள் இன்று மக்கள் அஞ்சலிக்கு

யாழ்மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன்மதி, லெப். தேவன் ஆகிய மாவீரர்களது வித்துடல்கள் இன்று காலை 10 மணிக்கு அவர்களது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கப்டன் மதியின் வித்துடல் யாழ்ப்பாணம் மடம்வீதியில் (முலவைச் சந்தி) உள்ள ஜெகன் படிப்பகத்திலும், லெப். தேவனின் வித்துடல் பருத்தித்துறைபஸ் நிலையத்திலும் காலை 11 மணிக்கு மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம் நிறைவுற இறுதி இராணுவ அணிவகுப்பு மரியாதைகளுடன் கப்டன் மதியின் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கும், லெப். தேவனின் வித்துடல் வடமராட்சி மாவீரர் துயிலுமில்லத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

# மாதாந்த படிப்பணம்

1985 ஆம் ஆண்டுக்கு முன் அரச சேவையிலிருந்து ஒய்வு பெற்றவர்கள் இம்மாதம் முதல் ஓய்வூதியத்துடன் மாதாந்தப்படி பணத்தையும் பெறவுள்ளனர். 50 ரூபாவிலிருந்து 200 ரூபாவரையிலான படிப்பணம் இத்திட்டத்தின்படி வழங்கப்படும்.

ஓய்வூதியம் வழங்குவதில் உள்ள குறைபாடுகளை நீக்கும் வகையில் இப்படிப்பணம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கென 18 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என ஒய்வூதிய திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# கரணவாயில் ஷெல் வீச்சு வயோதிபர் படுகாயம்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து கரணவாய்ப் பகுதி குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட பலத்த ஆட்லறித் தாக்குதலுக்கு வயோதிபர் ஒருவர் கழுத்தில் படுகாயமடைந்தார்.

புன்னாலைக்கட்டுவனைச்

இவ்வாறிருக்க சிறிலங்கா இராணுவம் ஏன் பின்னடைவுகளைச் சந்திப்பது என்ற கேள்வியில் தவறு ஏதும் இருப்பதாக இல்லை.

அதாவது, சிசில் வைத்தியரெட்னா ''எதிரியோ குறைந்த ஆட்பலமும், ஆயுதப்பலமும் கொண்டவன். ஆயுதப்படை எமது நோக்கங்களிலும், போர்த் திறனிலும் படையினர் தெளிவாக இருப்பின் ஏன் வெற்றி பெறமுடியாது?'' என்றுஎழுப்பியுள்ளகேள்வியில் நியாயம் ஓரளவு உண்டு. ஆனால் அவர் ஒரு தேசிய இனப் போராட்டத்தைப் பற்றிப் பிழையான கற்பிதத்தைக் கொண்டுள்ளார் என்பதையேஇதுகாட்டுகின்றது. இதுவே, அவரது தோல்விக்கும், ஆயுதப்படையின் தோல்விக்கும் காரணமாக அமைந்தனஎன்பதே நிதர்சனமாகும்.

விடுதலைப் புலிகள் சிறிய எண்ணிக்கை உடையவர்களாக இருக்கலாம். ஆனால் தனது விடுதலையை வேண்டி நிற்கும் தமிழினம் முழுமையாக அதன் பின்னால் நிற்கின்றது என்பதை முதலில் எதிர்த்தரப்பினர் உணரவேண்டும். இதுவே கடந்த காலத்தில் சிறிலங்கா இராணுவத்திடம் இருந்தும், இந்திய இராணுவத்திடம் இருந்தும் விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கும் பாதுகாப்பு அளித்ததென்பதைப் புரிந்து கொள்வது அவசியமானதாகும்.

நோக்கங்களிலும், போர்த்திறனிலும் தெளிவாக இருப்பதனால் போரில் வெற்றி பெறலாம் என்ற சிசிலின் வாதமானது ஏற்றுக்கொள்ளக் கூடிய தொன்று தான். ஆனால், இதற்கும் மேலாக, போராட்டத்திற்குத் தார்மீகப்பலம் என்ற ஒன்றும் அவசியம் என்பதும் முக்கியமானதாகும்.

சிறிலங்கா இராணுவம் தமிழரை ஒடுக்க வேண்டும், புலிகளை ஒழிக்க வேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற நோக்கங்களைத் தெளிவாகவே கொண்டுள்ளது. ஆனால், இவ் இன அழிப்பிற்கும், ஆக்கிரமிப்புக்கும் தார்மீகப் பலம் என்பதொன்று இல்லை. இதன் காரணமாக இராணுவத்தால் அர்ப்பணிப்பு என்பது செய்ய முடியாதது புதுமையானது அல்ல.

ஆனால், விடுதலைப்புலிகள் சிறிய எண்ணிக்கை, குறைந்தளவு ஆயுத பலம் என்பனவற்றுடன் போரிடினும் இப் போராட்டத்திற்கென தார்மீகபலம் உள்ளது. இதற்கென அர்ப்பணிப்பு செய்வதில் அர்த்தமுள்ளது. எதிரியின் பலம் என்னவாக இருப்பினும் எதிர்த்துப் போராடும் மனோவலிமையை இத் தார்மீக பலம் கொடுக்கக் கூடியது.

இந்நிலையில், இராணுவ வெற்றிக்கு ஆயுதபலம், ஆட்பலம் என்பதை விட தார்மீக பலமும் அதன் மூலம் உருவாகிய மனோபலமே தீர்மானிக்கின்றதென்பது அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொள்பவர்கள் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகாது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

---

கப்பலிலேயே காத்துக் கிடந்தது. அத்துடன் டிசம்பர் முதல்வாரத்தில் குடாநாட்டு மக்களின் பயன்பாட்டிற்கென எடுத்துவரப்பட்ட 300 மெற்றிக் தொன் மா இராணுவத்தினரின் பயன்பாட்டிற்கென காங்கேசன் துறையிலேயே இறக்கப்பட்டு விட்டது.

இவற்றைவிட பிரதானமாக நிதிப்பற்றாக்குறையும் இதற்குமுக்கியகாரணங்களில் ஒன்றாகவுள்ளது. யாழ். செயலகம் உரிய நிதியை செலுத்தினாலே அரசு மாவை அனுப்பி வைக்கும். ஒரு கப்பலில் மாவை இறக்க எமக்கு 3கோடியே 80லட்சம் ரூபா தேவை. இந்நிதியை நாம் மக்களின் ஏனைய நிதிகளிலிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம். தற்போது கையிருப்பில் இருக்கும் மா தொடர்ந்து ஏழு நாட்கள் வரை பேக்கரிகளுக்கு வழங்கக் கூடியதாக இருக்கும்.

தற்போது பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் கடைகளில் போதியளவு

---

## நெல் வயல்களில் அறக்கொட்டியான்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில்நெல் வயல்களில் அறக்கொட்டியான்புழு தாக்கிவருவதினால் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டு வருகிறது.

வெள்ள அழிவின்பின் தப்பியிருந்த பயிர்களும் இப் புழுவினால் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## பாடசாலைக்கு உள்ளூர் தளபாடங்கள்

(வடமராட்சி கிழக்கு)

நாகர்கோவில் மகா வித்தியாலயத்திற்கு உள்ளூரில்செய்யப்பட்ட தளபாடங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன,

ஆசிரியர் மேசை, கதிரை, பாலர் மேசை, கதிரை ஆகியனவே வழங்கப்பட்டுள்ளன.

மூலதன ஒதுக்கீட்டின் நிதியில் 50 ஆயிரம் ரூபா இத்தளபாடங்களுக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தன. (36)

---

அரசின் முக்கிய பிரமுகர்களாக இருப்போரின் வீட்டுத் தோட்டங்களை தோண்டினால் மேலும் எலும்புக் கூடுகள் கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை இச் சம்பவம் குறித்து அரசு ஏன்மௌனம் சாதிக்கிறது எனவும் லண்டன் சர்வதேச மன்னிப்புச் சபையின் உதவியுடன் எலும்புக் கூடுகளை விஞ்ஞான ரீதியில் பரிசோதிக்க வேண்டும்

---

1 - 3 ஆரம்ப ஆசிரியர்களுக்கு இன்றுமுதல் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை நடைபெறவிருந்த கருத்தரங்குதவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை சகல ஆரம்ப ஆசிரியர்களுக்கும் அறிவிக்கின்றோம். நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்ப்பாணம் / நல்லூர் கோட்டகல்வித்திணைக்களம் அறிவிக்கின்றது.

---

சுவரிலே

வெளியேறியபடி சுமார் இரண்டு வயது மதிக்கத்தக்க குழந்தை ஒன்றும் பிணமாக கிடந்தது. இவர்களுடன் சிலயார் தூரத்தில் பெண்மணி ஒருவரின் துண்டிக்கப்பட்ட தலைமட்டும் கண்கள் வானை நோக்கியபடியே கிடந்தது. அருகில் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் நாய் ஒன்று இரண்டாகப் பிளந்த நிலையில் குடல்கள் வெளியே வந்தபடி இறந்து கிடந்தது.

வீடுகளின் சிதறல்கள் பரவலாகக்காணப்பட்டன. சிறிய சிறிய சதைப்பிண்டங்கள் சிலயார் தூரங்கள்வரை சிதறிப் பரந்து காணப்பட்டன. தூரத்திலிருந்த மேசை மீது யாரோ ஒருவரின் சில உறுப்புகள் ஒட்டிக்கொண்டிருந்தன.

சற்றுநேரத்திற்குள் எல்லா ஆண்களும், பெண்களுமாக பலர் சம்பவம் நடந்த இடத்திலே கூடிவிட்டனர். உறவினர்கள் தமது உறவுகளைத் தேடி அங்கலாய்த்தபடி அடையாளம் காண்பதில் தீவிரம் காட்டினர். மூவரை அடையாளம் கண்டுகொள்வது பெரும் சிரமமாக இருந்தது; ஏனெனில் இவர்களது உடல்கள் பல கூறுகளாக சிதறிக் கிடந்ததனால்.

வீடுகளுக்குள் புகுந்து குடியிருப்பாளர்களை பார்க்கவே மக்கள் அச்சமடைந்து பின்வாங்கிக்கொண்டிருந்தனர். புக்காரா இடைவிடாது வட்டமிட்ட வண்ணமிருந்ததே அதற்குக்காரணம். அது மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என்பதாலேயே மக்கள் பதற்றமடைந்தபடி சிதைவுகளைக்கூட தோண்டமுடியாது தவித்தனர்.

ஏனையோர் பதுங்கு குழிக்குள் புகுந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழவே சில இளைஞர்கள் இணைந்து பதுங்கு குழியை தோண்டினர். பதுங்கு குழிக்கு மிகசமீபமாகவே இக் குண்டு வீழ்ந்து வெடித்ததில் பதுங்கு குழியின் வாயிலும் மூடப்பட்டுவிட்டது. ஆயினும் அதற்குள் எவரும் அகப்படவில்லை

இந்த நான்கு பேரும் பதுங்கு குழியை நாடி ஓடிக்கொண்டிருந்தபோதே இக் குண்டு வீழ்ந்து வெடித்திருக்க வேண்டும். அதன்போது குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடியவர் தூக்கி வீசப்பட்ட போது அயல்வீட்டு சுவருடன் மோதியே இவ்வாறு கோரமானமுறையில் பலியாகியுள்ளார்.

சற்று நேரத்திற்குள் உறவினர்கள் சதைப்பிண்டங்களை பொறுக்கி பாய்களிலும், துணிகளிலும் போட்டு சுத்திக் கட்டி யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர்.

இத்தாக்குதல் நடைபெற்ற சில நிமிடங்களுக்குள்ளேயே பெற்றோர் தமது பிள்ளைகளைத்தேடி பாடசாலைகளுக்குப் படையெடுத்தனர். வீதிகள் எங்கும் ஒரே பரபரப்பு. பாடசாலைகள் உடனடியாகவே மூடப்பட்டு ஆசிரியர்களும், மாணவர்களும் அவசர அவசரமாக வீடுகளைநோக்கி விரைந்தனர். பல பள்ளிச் சிறுவர்கள் வீரிட்டுக் கத்தியபடி தமது பாடசாலைப் பைகளையும் கைகளிலே தூக்கியவாறு வீதிக்கரையோரமாக ஓடிக்கொண்டிருந்ததை காணமுடிந்தது.

---

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து கரணவாய்ப் பகுதி குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட

பலத்த ஆட்லறித் தாக்குதலுக்கு வயோதிபர் ஒருவர் கழுத்தில் படுகாயமடைந்தார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் (வயது 60) என்ற வயோதிபரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார். புகையிலை நாற்றுவாங்குவதற்காக சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த இவர் வீடொன்றின் வாசலில் நின்றபோது ஷெல்பட்டு படுகாயமடைந்தார். இவர் அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இவர் தரித்து நின்ற வீடும் சேதமடைந்தது.

இச்சம்பவம் நேற்று காலை 10-30 மணியளவில் நடைபெற்றது. பலாலியிலிருந்து ஏவப்பட்ட இரண்டாவது ஷெல்லுக்கே இவர் காயமடைந்தார். முதலாவதுஷெல் இவர் நின்ற இடத்திற்கு மேலாக கூவிச் சென்றது,

(யோ)

---

## பிற்மன் வாரவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும், தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபை சுருக்கெழுத்தாளர் தொழில் பயிலுநர்களும் (வடமராட்சி) இணைந்து நடாத்தும் ''பிற்மன் வாரவிழா-1994'' எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அல்வாய் யாழ். சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

---

வன்னிப்

மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் ஞானம் திரைநீக்கம் செய்தார். திறப்புவிழாவில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், அரசியல் துறையின் வன்னிப் பெருநிலப்பரப்பு நடுவகப்பணியக பதில் பொறுப்பாளர் மதன், கிளிநொச்சி கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் குட்டிமணி உட்பட போராளிகள், காவல்துறையினர், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து சம்பிரதாய பூர்வமாக இரு வழக்குகள் விசாரிக்கப்பட்டன. நீதியாளர் ஜனகன் முன்னிலையில் நடந்த இவ்வழக்கு விசாரணையை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ காவல் துறைப்பொறுப்பாளர் நெறிப்படுத்தினார்.

கிளிநொச்சியில் மாவட்ட நீதிமன்றம் திறக்கப்பட்டதை யடுத்து, அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்திலும் பின்னர் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் நீதிமன்றங்கள் திறந்துவைக்கப்படும் என நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

---

## கொடுப்பனவு கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்குரிய 1993 நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப் படவில்லை. இதற்கான நிதி இன்னும் வந்து சேரவில்லையென்றும் விரைவில், இந்நிதி வந்து சேர்ந்தவுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் படும் என்றும் மேற்படி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (22)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆறுமுகம் சிவகாமி
**(4-ம் வட்டாரம், மண்கும்பான்)**

திருமதி ஆறுமுகம் சிவகாமி அவர்கள் 5. 01. 94 இல் காலமானார். அன்னார் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி விசுவநாதி வள்ளியம்மை அவர்களின் அன்பு மகளும், திரு. வைத்திலிங்கம், திருமதி ஆறுமுகம், வியாழாச்சியின் அன்புச் சகோதரியும் திருமதி கவுந்தரம், இராசம்மா. குமாரசாமி, சின்னத்துரை (வியாபாரி திருநெல்வேலி), சின்னம்மா, பாலசிங்கம், மகேந்திரன் (வியாபாரி திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகரெத்தினம், பண்டா, நேசமலர், நாகேஸ்வரி, செல்வரெட்னம், விஜயலக்சுமி, இராசமணி, இன்பம், பவளம், இராசேஸ்வரி, வேவி, ராணி, செல்வராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், தருமலிங்கம், தெய்வேந்திரம், கந்தசாமி, இலெட்சி, சற்குணம் (வியாபாரி திருநெல்வேலி), வீரகத்திப்பிள்ளை, பவளம் ஆகியோரின் அன்புப் பெரியதாயுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 6 01. 94 வியாழக்கிழமை பகல் 12 00 மணிக்கு ஆ. சின்னத்துரை புதுவீதி, ஆறுகால் மடம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

புதுவீதி,
ஆறுகால்மடம். (7151)

கா. ஆறுமுகம்
(கணவன்)

## எட்வேட் நல்லையா
**(இளைப்பாறிய அதிபர், வேலணை)**

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கையில் வசித்தவருமாகிய, இளைப்பாறிய அதிபர் எட்வேட் நல்லையா காலமானார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் வரதராஜன் (பிரான்ஸ்), வரதராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருந்தவ ஈஸ்வரி (பிரான்ஸ்), பாரதிதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், உமாசங்கர், விக்டர், வரணியா, மயூரன், திவ்வியா, திவாஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேரனும், வேலணையைச் சேர்ந்த செல்வராஜா காலஞ்சென்ற குணரட்ணம், அமிர்தலிங்கம், திருமதி சிவமணி சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நவரத்தினராசாவின் அன்பு மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

51, 3-ம் ஒழுங்கை,
பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.

திருமதி நல்லையா
எ. அமிர்தலிங்கம்
(அமுதர்)

# வீரச்சாவு



### கப்டன் துரை



### வீரவேங்கை குலோத்துங்கன்/ கிளாஸ் நிக்கோ

பூநகரிப் பகுதியில் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற கண்ணிவெடி விபத்தில் கப்டன் துரை (தேவராசா பாஸ்கர் ஐந்துசந்தி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்) எனும் போராளி வீரச்சாவடைந்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் அம்பந்தனாவெளி புளிபடித்துறை என்னுமிடத்தில் வைத்து கடந்த 3ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரவேங்கை - குலோத்துங்கன்/கிளாஸ் நிக்கோ (தம்பிராஜா முரளிதரன், கோவில் போரதீவு, பெரிய போரதீவு) என்பவரே வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஊழியர் கொடுப்பனவு

லங்கா சீமெந்து லிமிடெட் ஊழியர்களின் 93, நவம்பர் டிசம்பர் ஆகிய இரண்டு மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் சுன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என கணக்காளர் அறிவிக்கிறார்.

## வீரச்சாவு

### பரஞ்சோதி கணேசமூர்த்தி
### (கப்டன் மதி)

இவர் 05- 01- 1994 இல் வீரச்சாவு அடைந்தார். இவர் வாரிவளவு காரைநகரைச் சேர்ந்த பரஞ்சோதி கமலாம்பிகை தம்பதிகளின் மகனும் சிறிமகேந்திரராசா (நீர்கொழும்பு), குருபரன், முகுந்தன் ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார். அன்னாரின் வித்துடல் 06- 01- 1994 இன்றுகாலை 9 00 மணிக்கு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போதைய முகவரி:
554 கமால் வீதி.
ஐந்து சந்தி கற்குளம்,
யாழ்ப்பாணம்.

தகவல்;
ப. கமலாம்பிகை
(தாயார்)
(7158)

# தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் பரிசில் பெறுவோர் விபரம்

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வுககான பெறுபேறுகள் நேற்று வெளியாகின. வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 16,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றி இப்பொதுக்கல்வித்தேர்வில் தேசிய கோட்டமட்டங்களில் கூடுதல் புள்ளிகளை பெற்றவர்களுக்கு தேசியத் தலைவரினது பரிசுகளும், பாராட்டிதழ்களும், கல்வி மேம்பாட்டு பேரவையினால் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. தேசிய மட்டத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் முதல் 10 பேரும் கல்விக் கோட்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் முதலிரு இடங்களை பெறுபவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

தேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவர்களின் பெயர், பாடசாலை பெறுபேறு, மொத்தப் புள்ளிகளின் விபரங்கள் வருமாறு; சிவதர்சினி சிவசுப்பிரமணியம், வேம்படி மகளிர் கல்லூரி, 8 டி, 712 புள்ளிகள்; ஆறுமுகம் தேவராஜா வெஸ்லி தேவசுதன், ஹாட்லிக் கல்லூரி, 8 டி, 702 புள்ளிகள்; குகாஜினி தில்லைநாதன், வேம்படி மகளிர் கல்லூரி, 8 டி 693 புள்ளிகள்; சுந்தரலிங்கம் காந்தரூபன், பரியோவான் கல்லூரி, 8 டி, 691 புள்ளிகள்; சுதந்திர பாலன் கௌரிசங்கர், யாழ். இந்துக்கல்லூரி, 7 டி, 1 சி, 682 புள்ளிகள்; சிவசுப்பிரமணியம் சிவசாம்பவன், யாழ். இந்துக்கல்லூரி, 7 டி, 1 சி, 673 புள்ளிகள்; நாகசந்திரா கீர்த்தனன், பரியோவான் கல்லூரி 7டி, 1 சி, 673 புள்ளிகள், ஷவானி திருஞானசம்பந்தன், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 8 டி, 671 புள்ளிகள்; பாலச்சந்திரன் பாலமுரளி, பரியோவான் கல்லூரி, 7 டி, 1 சி, 669 புள்ளிகள; கௌரி நவரத்தினசோதி, மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை 7 டி, 1 சி, 666 புள்ளிகள்.

கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெறுவோர் விபரம் வருமாறு:

நல்லூர் கோட்டம்- உலகப்பிரகாசம் ஜெயதீபன், யாழ். இந்துக்கல்லூரி, 8 டி, 657 புள்ளிகள்; மகாலிங்கம் அறிவழகன் யாழ் இந்துக்கல்லூரி, 7 டி, 1 சி, 653 புள்ளிகள்.

யாழ். கோட்டம்- பாமினி தர்மலிங்கம், சுண்டிக்குளி. ... 649 புள்ளிகள்.

மருதங்கேணி கோட்டம், சிவமலர் வேலுப்பிள்ளை, ஆழியவளை சி. சி. த. க. பா, 4 டி, 2சி, 2எஸ், 517 புள்ளிகள், துரைசிங்கம் விஜயபாஸ்கர், ஆழியவளை சி. சி. த. க. பா., 3டி, 3சி, 2எவ், 473 புள்ளிகள்.

சாவகச்சேரிக் கோட்டம்; சாமுவேல் துஷ்யந்தன் 7டி, 1சி, 662 புள்ளிகள், சுஜாஜினி ராசதுரை, 7டி, 1சி, 643 புள்ளிகள்.

உடுவில்கோட்டம்-ரஜித்தா காந்தரட்ணம், உடுவில் மகளிர் கல்லூரி 7டி, 1சி, 654 புள்ளிகள் சுதாகினி புலேந்திரன், உடுவில் மகளிர் கல்லூரி 6டி, 2சி, 632புள்ளிகள்.

சங்கானைக் கோட்டம்- நிலாணி இராமச்சந்திரன், யாழ்ப்பாணக்கல்லூரி 7 டி, 1சி, 642 புள்ளிகள்; செல்வராஜா தவேந்திரன், யாழ்ப்பாணக்கல்லூரி, 5டி, 3சி, 638 புள்ளிகள்.

சண்டிலிப்பாய் கோட்டம் காராளசிங்கம் சசிகரன் மானிப்பாய் இந்துக் கல்லூரி 6டி, 1சி, எவ். 582 புள்ளிகள் ஜராஸ்கினி யோகராஜா மானிப்பாய் மகளிர் கல்லூரி 3டி, 5சி, 568 புள்ளிகள்)

கோப்பாய்க் கோட்டம் ஜெயமாலா தர்மலிங்கம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி 5டி, 3சி, 601 புள்ளிகள்; சிவபாக்கியநாதன் ஸ்ரீசோதி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 6டி, 1சி, 1எவ், 591புள்ளிகள்.

தெல்லிப்பழைக் கோட்டம் திருச்செல்வி திருவாதவூரன். யூனியன் கல்லூரி 6டி, 2சி, 645புள்ளிகள் சர்மிளா சண்முகலிங்கம், யூனியன் கல்லூரி 5டி, 3சி 620 புள்ளிகள்.


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

**பழைய மாணவர் தினமும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் (இருநாட்கள்)**

**பழைய மாணவர் தின நிகழ்ச்சிகள்**

இடம் : கல்லூரி விடுதி மண்டபம்
காலம்; 22-1-94 (சனிக்கிழமை)
நேரம்: மு ப. 10-00 மணி முதல் பி.ப. 4-30 மணி வரை

முக்கிய குறிப்பு:

- பழைய மாணவர் தினத்தினை நாம் முதல் முதலாகக் கொண்டாடுகின்றோம். அதனால் சகல பழையமாணவர்களும் பங்குபற்ற வேண்டுமென விரும்புகின்றோம். திருமணமாகிய பழைய மாணவர்கள் முக்கியமாக தமது துணைவியர்களுடன் பங்குபற்ற வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
- பங்குபற்ற விரும்பும் பழைய மாணவர்கள் ஒருவருக்கு ரூபா 50/-ன்படி மதிய போசனக் க[illegible]டணத்தை 19-01-1994 க்கு முன்னர் எமது பொருளாளரிடம் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும்படி கோருகின்றோம்

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

இடம் : கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்; 23-01-1994 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 8-30 மணி

- வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு தனிநபர் பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் அதனை 11-01-1994 க்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படி கோருகிறோம்.

யாழ்ப்பாணம்.

(அமுதர்)

(7157) (சகோதரன்)

## சிற்றம்பலம் பிறைசூடி

(இ. போ. ச. சாரதி வவுனியா)

சிற்றம்பலம் பிறைசூடி 05-01-94 இல் அகால மரணமடைந்துவிட்டார். இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பிறேமச்சந்திரன் (ஜேர்மனி), பிரபாகரன் (ஜேர்மனி), பிரியதரிசினி, பிரதீபன், ராஜ்குமார் ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்ற இராசம்மா, கைலாயபிள்ளை ஆகியோரின் சகோதரரும், சிங்கராசா, இராசலிங்கம், சிவபாலன் (கண்டி) ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 06-01-94 நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

மீசாலை கிழக்கு.

(7155)

**புவனேஸ்வரி**

(மனைவி)

## இளையதம்பி ஞானம்மா

இளையதம்பி ஞானம்மா அவர்கள் 3-1-1994 அன்று திருகோணமலையில்காலமானார். இவர்காலஞ்சென்றவர்களான இளையதம்பி அன்னம்மா அவர்களின் மகளும், காலஞ்சென்ற ஜோண், ஆசீர்வாதம் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் R. V. D B) ஆகியோரின் சகோதரியும், மார்கிறடின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, புனித மரியாள் வித்தியாசாலை, யாழ்ப்பாணம்) மைத்துனியும், மங்கலிக்கா, சந்திரிக்கா, ரமேஷ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். நல்லடக்கம் திருகோணமலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

**இ. ஆசீர்வாதம்**

(சகோதரர்)

854, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(7156)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் திகதி [illegible]

## மரண அறிவித்தல்



## செல்வி குலேந்திரா கோபாலசிங்கம்

(சாவகச்சேரி இந்துமகளிர் கல்லூரி க. பொ. த. சாதாரணதர வகுப்பு மாணவி)

மட்டுவில் வடக்கு, கனகம்புளியடியைச் சேர்ந்த செல்வி குலேந்திரா கோபாலசிங்கம் 05-01-1994 அன்று கொடிய விமானத்தாக்குதலில் அகாலமரணமானார். இவர் கோபாலசிங்கம் (C T. B. கோண்டாவில்) இந்திராணி தம்பதிகளின் மூத்த புதல்வியும், மாறன், விஜயன், டயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரவணமுத்து சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 6-1-94 வியாழக்கிழமை நண்பகல் 2 மணிக்கு மட்டுவில் கனகம்புளியடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகம்புளியடி கிழக்கு,

மட்டுவில்.

(7159)

தகவல்:

நடராஜா சத்தியரூபன்

(மாமன்)

யாழ். கோட்டம்- பாமினி தர்மலிங்கம், சுண்டிக்குளி, மகளிர் கல்லூரி, 8 டி, 663 புள்ளிகள்; ஜெராஷணி திருவிளங்கம், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 7 டி, 1 சி, 657 புள்ளிகள்.

ஊர்காவற்றுறைக் கோட்டம் - பெலிசியா பெலிக்ஸ் அல்பேட், ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வி. 6டி, 2சி, 628 புள்ளிகள்; புவனச்சந்திரன் ரவீந்திரன், யாழ்ரன் கல்லூரி 5டி, 1சி, 2எஸ், 545புள்ளிகள்.

வேலணைக்கோட்டம் - பரமானந்தன் சாயிநேசன் புங்குடுதீவு ம. வி. 4டி, 2சி 2எஸ், 540 புள்ளிகள்; பரஞ்சோதி குணதீபன் சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. வி. 3டி, 4சி, 1எஸ் 526புள்ளிகள்.

கரவெட்டிக்கோட்டம் - சர்மிளா தவேஸ்வரன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 6டி, 2சி, 650 புள்ளிகள்; சிராந்தினி ஜெகநாதன், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 8டி 646 புள்ளிகள்.

பருத்தித்துறைக்கோட்டம்- கந்தசாமி யோகநாதன் ஹாட்லிக் கல்லூரி 8டி, 657 புள்ளிகள்; சிவம் ராஜாராம் ஹாட்லிக் கல்லூரி 7டி, 2சி

## கணிதபாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயம் 2 ஐச் சேர்ந்த சகல கணித பாட முதன்மை ஆசிரியர்களுக்கும், கணித மூலவள நிலையப் பொறுப்பாசிரியர்களுக்கும் செயலமர்வு நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை வரும் சனிக்கிழமையன்று காலை 9 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள மேற்படி செயலமர்வில் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையப் பொறுப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படி கோருகிறோம்.

- வருடச் சந்தா செலுத்துவதற்கான இறுதித் தினம் 14-01-94 ஆகும். வழமைபோன்று மதிய போசனம் இடம்பெறமாட்டாது.
- அங்கத்தவர்களுக்கான தனிப்பட்ட அழைப்பிதழ்கள் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

பழைய மாணவர் சங்கம்,

யாழ். இந்துக் கல்லூரி.

(சி-8292)

(பாலசுப்பிரமணியம தவபாலன்)

செயலாளர்.

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## ஒழுங்கு நடவடிக்கை

நெல்லியடியில் அமைந்துள்ள "MATHS CENTRE" என்னும் தனியார் கல்வி நிறுவனம் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆண்டிறுதித் தேர்வின் நம்பகத்தன்மையை குலைக்கும் வகையில் செயற்பட்டமைக்காக 05-01-1994 முதல் இக்கல்விநிறுவனத்தை தனியார் கல்விப்பிரிவு பொறுப்பேற்றுக்கொள்வதுடன் உரிய தண்டப்பணமும் அறவிடப்படுகிறது என்பதையும் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்பிப்பதற்கு தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

பொதுச்செயலாளர்,

யாழ். மாவட்டம்.

(சி-8294)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 05 - 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 83

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-0415, 26-5202, 24-4560, 27-2089, 42-1293, 26-7545, 41-7563, 27-5186, 26-6075, 26 5351, 24-6972, 24-9609, 26-1583, 27-2004, 27-9416, 24-4207, 28-1414, 26-1019, 24-4323, 43-4580, 24-5041, 22-5812